Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 02 - கதிர் - 50 | 08.06.2001 | வெள்ளிக்கிழமை | பக்கங்கள் - 08 | விலை ரூபா 5/-

நகையா 22 கரட்டில் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்
A.K.S ஜீவலர்ஸ்
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி

## புலிகள் தடை நீக்கம் தொடர்பாக — நோர்வே பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை

(நமது நிருபர்)

இலங்கை வந்துள்ள நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் த்ரொப்ஜோன் ஜக்லண் நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் நேற்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஏற்படுத்துமுகமாக நோர்வே அரசு கடந்த இரண்டு வருடகாலமாக தீவிரமுயற்சியில் ஈடுபட்டு வந்த போதும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதலைப்புலிகள் மீதான தடையைத் தளர்த்த வேண்டுமென விடுதலைப்புலிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் அழைப்பின் பேரிலேயே நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் கொழும்பு வந்திருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் கடுமையான போக்கினைக் கடைப்பிடித்த போதும் தற்போது அது தொடர்பாக மறுபரிசீலனை செய்ய அரசாங்கத் தரப்பு ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

# வடக்குகிழக்கு வைத்தியர்கள் திங்கள் முதல் வேலை நிறுத்தம்!

(இரா.துரைரத்தினம், க.ஜெகதீஸ்வரன்)

**வடக்கு-கிழக்கில் உள்ள அரச ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் வைத்தியர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.**

அரசாங்க வைத்தியர்கள் அனைவருக்கும் இன,பிரதேச பாகுபாடின்றி சகல கொடுப்பனவுகள், வசதிகளை வழங்கவேண்டும் என்றும், வடக்கு கிழக்குப் பிரதேசத்தை பிறப்பிடமாக கொள்ளாத தென்னிலங்கை வைத்தியர்களுக்கு வழங்கப்படும் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு, மற்றும் காப்புறுதி வசதிகளை வடக்கு கிழக்கைச் சேர்ந்த வைத்தியர்களுக்கும் வழங்க வேண்டும் எனக் கோரி எதிர்வரும் 11ம் திகதி திங்கட்கிழமை முதல் வடக்கு கிழக்கில் உள்ள அரசாங்க வைத்தியர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

சுகாதார அமைச்சு தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என நேற்று வியாழன் மாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நூலக மண்டபத்தில் அரசாங்க வைத்திய சங்க மட்டக்களப்பு மாவட்ட கிளை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் சங்க தலைவர் டாக்டர் கே.கருணாகரன் தெரிவித்தார். இ...

(8ம் பக்கம் பா...)

## ஏறாவூரில் துப்பாக்கிச் சூடு இளைஞர் காயம்!

(ஜெகதீஸ்வரன்)

ஏறாவூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றிரவு இனந்தெரியாதோரினால் சுடப்பட்டு பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு அரச போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## சம்மாந்துறை பொலிஸ் அதிகாரி மீது இனந்தெரியாத நபர் சூடு! அதிகாரி ஸ்தலத்திலேயே மரணம்

(ஐ.எல்.ஜலீல்)

தனது வீட்டிலிருந்து கடமைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்குச் செல்லுகையில், சம்மாந்துறை தைக்கா பள்ளி வீதி அல்முனீர் பாடசாலை சந்தியில் வைத்து நேற்றுக்காலை 7.43க்கு. உபபொலிஸ் கான்ஸ்டபிள் (2696) அலியார் அப்துல் ரகீம் (34) என்பவர் இனந்தெரியாத நபர்களால் 9எம்.எம் பிஸ்டலினால் சுடப்பட்டு

(8ம் பக்கம் பார்க்க)

## வாகன ஊர்தி பேரணியுடன் மட்டக்களப்பில் பவள விழா

(அரியம்)

மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷண மிஷன் பவள விழா இறுதி நாள் விழா நேற்று மட்டக்களப்பில் மிகவும் கோலாகலமாக இடம் பெற்றது.

நேற்றுக்காலை 9 மணிக்கு மட்டுநகர் ஆனைப்பந்தியில் வினாயகர் ஆலயத்திலிருந்த வாகன ஊர்தி மட்டுநகர் விதியூடாக கல்லடிவிவேகானந்தா மகளிர் இல்லத்தை சென்றடைந்தது.

இந்த அலங்கார பவனியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து கல்லடி விவேகானந்தா மகளிர்

(8ம் பக்கம் பார்க்க)




**உடனடி வேலைவாய்ப்பு**

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத ... பணிப்பெண்களுக்கு முற்... இலவசமாக சவூதி அரேபியா... அனுப்பி வைக்கப்படும். வயதெ... 25 தொடக்கம் 40 வரை (கு...வத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா க...டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்ப...டும்)

1. டோகா கட்டார் இலும் உ...டி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

உடனடிப் பயணம்

**நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்**

LL No -736

**283/1 பிரதான வீதி, கொழும்பு.**

***விசாரணைகளுக்கு:***

**இல:15/1, 15/2, பிரதான வீதி, காத்தான்குடி -02**

065-47090 ADVT.



மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் பவள விழாவை முன்னிட்டு மிஷன் சுவாமிகள் அமர்ந்திருப்பதையும் அலங்கார ஊர்திகள் பவனி வருவதை முதல் மூன்று படங்களிலும், நேற்று நாவலடியில் நடைபெற்ற காயாத்திரியாகத்தின் போது காயத்திரி சித்தர் முருகேசு சுவாமி அழைத்துச் செல்லப்படுவதை நான்காவது படத்திலும் காண்க

தினக்கதிர்

தபெ. இல: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554

## எப்போது விழித்தெழுவார்கள்?

சந்திரிகா பண்டாரநாயக குமாரத்துங்க தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு எடுக்கும் முயற்சிகள் பற்றித்தான் கொழும்புப் பத்திரிகைகளும் தென்னிலங்கை அரசியல் வாதிகளும் அதிகம் அலட்டிக் கொள்கின்றன.

எதிர்க் கட்சியினர் கொண்டு வரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க்கட்சியினர் எம்பிக்களை விலை கொடுத்து வாங்க முயற்சிப்பதாக ஆளும் கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து ஆட்சியில் தொடர்ந்திருப்பதற்காக எம்பிக்களை விலை கொடுத்து வாங்க முயற்சிப்பதாக ஆளும் கட்சி மீது எதிர்க்கட்சியினர் குற்றஞ் சுமத்துகிறார்கள்.

எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணையால் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசாங்கம் எடுத்துவரும் முயற்சி தடைபடக்கூடுமென்றும் இந்த முயற்சியில் தான் எதிர்க்கட்சியினர் ஈடுபட்டு வருவதாகவும் ஆளும் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

சந்திரிகா அம்மையார் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகக் கொண்டு வந்திருக்கும் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற விடாமல் எதிர்க்கட்சி குழப்புவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

சந்திரிகா அம்மையாரின் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு இரண்டில் மூன்று பெரும்பான்மை வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்புத் தரப்போவதில்லை. இந்நிலையில் இது எப்படி நிறைவேறப்போகிறது?

இந்த அரசியலமைப்பில் அதிகாரப் பரவலாக்கல் பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். அதிகாரப் பரவலாக்கலுக்குத் தானா தமிழ் மக்கள் இவ்வளவு துயரங்களையும், துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அதிகாரப் பரவலாக்கலுக்காகவா விடுதலைப் புலிகள் இத்தனை உயிர்த் தியாகம் செய்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்?

இதே சமயம் எந்த அதிகாரமும் இல்லாத இந்த நிலை அரசியலமைப்புத் திட்டத்தை எதிர்த்துத்தான் பிக்குகள் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்ததும் ஒரு பிக்கு கொழும்பில் புறக்கோட்டையில் ஒரு அரச மரத்தின் கீழ் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்ததும் இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பாராளுமன்றத்துக்குத் தேர்தல் நடந்ததும் உலகறிந்த விஷயம்.

மீண்டும் இந்த புதிய அரசியல் அமைப்பை எதிர்த்து பிக்குகள் ஆர்ப்பாட்டமும், உண்ணாவிரதமும் இருக்க மாட்டார்களென்பது என்ன நிச்சயம்?

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமாக, சுமுகமான தீர்வு காணப்படவேண்டுமென்றும் இந்தப் பேச்சுவார்த்தை மூலம் அடைய வேண்டுமென்ற யோசனையை அடைவதற்காகத்தான் அரசும் விடுதலைப் புலிகளும் நோர்வே நாட்டை அனுசரணையாளராக இருதரப்பும் ஏற்றுக் கொண்டன.

புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை இப்போது பேச்சு வார்த்தைகளுக்குத் தடையாக இருக்கிறது. இந்தத் தடையை நீக்குவதற்கான முயற்சிகள் இன்னும் முட்டுக்கட்டை நிலையிலேயே இருக்கிறது.

போரினால் மக்கள் படும் அல்லலும் தொல்லையும் சொல்லில் வடிக்க முடியாது. நாட்டு மக்கள் அனைவருமே வாழ்க்கைப் பளுவைத் தாங்க முடியாமல் துவண்டு கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மக்கள் பாதுகாப்புப் படையினரின் கெடுபிடி, துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சு, கைதுகள் என்று தினமும் தாங்க முடியாத வேதனையும் சோதனையும் அனுபவிக்கின்றனர். நோர்வே சமா தானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் எப்போ வருவார? சமா தானத்தைக் கொண்டு வருவாரா? நிம்மதி கிடைக்குமா? என்று வடக்கு கிழக்கு மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் ஆட்சி பீடத்திற்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்களினதும் கவலையெல்லாம் அதிகாரத்தில் நீடித்திருக்க முடியுமா என்பது பற்றியும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமா என்பது பற்றியும் தான்.

நாட்டு மக்கள் வேறுபாடுகளை மறந்து எப்போது விழித்தெழப் போகிறார்கள?

# நீதி நிர்வாகத்துடன் சிவில் நிர்வாகம் இணைந்து செல்ல வேண்டும்

'யுத்த பூமியாகிய வவுனியாவில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்ற அதே வேளையில் சட்டவாட்சியும் சரியான முறையில் செயற்பட வேண்டும் அதற்கு நீதி நிர்வாகம் சிறப்பாக நடக்கவேண்டும். சிவில் நிர்வாகத்தின் இறுதி இலக்காகிய நீதி நிர்வாகம் சரியான முறையில் நடைபெறுவதற்கு சிவில் அதிகாரிகள் இயற்கை நீதி கோட்பாடுகளின் அடிப்படையில் சட்ட நுணுக்கங்களைப் பின்பற்றி செயலாற்ற வேண்டும்.' இவ்வாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் அந்த மாவட்டத்தின் அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் சிவில் நிர்வாக உயரதிகாரிகள், அரச அதிகாரிகள் மத்தியில் கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்புச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ள

**நீதிபதி இளஞ்செழியன்**

வவுனியா மாவட்டத்தில் சிவில் நிர்வாக அதிகாரிகள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து இராணுவ இணைப்பதிகாரிக்கு எடுத்துக்கூறி, ஆலோசனைகள் தெரிவித்ததன் பின்னர், சிவில் நிர்வாகத்தைச் சீர்ப்படுத்தவும், நீதி நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்குமான இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக நீதிபதி இக்கூட்டத்தில் விளக்கமளித்தார். வன அதிகாரிகள், மின்சார சபையினர் பல பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள் என



தெரிவித்த அவர், இம்மாவட்டத்தில் சிவில் நிர்வாக அதிகாரிகள் சிறப்பாகச் செயற்படுவது குறித்து பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

சிவில் நிர்வாகத்தை சட்டவாட்சியின் மூலம் பலப்படுத்துவதற்காக நீதிநிர்வாகம் சரியான முறையில் நடக்கும்போது மக்கள் உரிமைகள் நீதிம்ன்றத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி எம். இளஞ்செழியன் இவ்வாறான ஒரு சூழலில் அதிகாரிகள் தமது அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டுச் செயற்பட முடியாது என்றும் அதிகாரத் துஸ்பிரயோகம் இடம்பெற மாட்டாது என்றும் தெரிவித்தார். சிவில் அதிகாரிகளுக்கு நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மட்டுமே உள்ளது. ஒருவருக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்பதையும் அவர் வலியுறுத்தினார். ஆட்சி நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கே உள்ளது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

சிவில் அதிகாரிகள் தண்டனை வழங்குவார்களேயானால்,



மீளாய்வின் மூலம் சிவில் நிர்வாகத்தை வழிப்படுத்தவும், அத்தகைய செயற்பாடுகள் மீண்டும் ஏற்படாத வண்ணம் தடுக்கவும் வழியேற்படும். நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சம்பந்தப்பட்டவர்களுக்கு அதுபற்றி அதிகாரிகள் முதலில் அறிவிக்க வேண்டும். அதுசம்பந்தமான விசாணைகளை மேற்கொள்ளும்போது, அதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு காரணம் தெரிவித்து, அவர்கள் அது தொடர்பாக பதிலளிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். பிரச்சினைக்கு உரிய ஒரு விடயத்தில் சிவில் அதிகாரி ஒருவர் ஒரு பக்க நலனுக்குரியவராக இருந்தால் அவர் அந்த விசாரணையில் ஈடுபடக்கூடாது. அதனைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இயற்கை நீதி கோட்பாடுகளைக் கடைப்பிடித்துச் செயற்பட வேண்டியது சிவில் நிர்வாகிகளின் கடப்பாடாகும் என்றும் அவர் விளக்கமளித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

### சிவில் நிர்வாகத்தின் இறுதி இலக்கு

இயற்கை நீதியைப் பின்பற்றி சட்டப்புத்தகத்தின் சட்ட நுணுக்கங்களின் அடிப்டையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளைச் சரியான முறையில் மேற்கொள்வதற்கு நீதிமன்றத்தின் நீதி நிர்வாகத்தின் கீழ் வழக்குகளைத் தாக்கல் செய்வதன் மூலம் சிவில் நிர்வாகம் அதன் இறுதி இலக்கை நீதிமன்றத்தில் அடைகின்றது.

வனபரிபாலன அதிகாரிகள், வவுனியா நகரசபை, மின்சார சபை, அரச வைத்தியதுறை அதிகாரிகள் தமது நிர்வாகக் கடமைகளில் பல்வேறு நெருக்குதல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதனால், சட்டத்தின் துணைகொண்டு நீதி நிர்வாகத்தின் உதவியோடு அவர்கள் தமது சிவில் நிர்வாகக் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்.

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறினார்கள் என்பதற்காக மாணவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் சராசரியாக மாதத்தில் பத்து வழக்குகள் வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு வருகின்றரா். இந்த மாணவர்கள் தமது பாடசாலையின் டையையும், பாடசாலையின் இலச்சினையை தமது உடைகளில் பொறித்த வண்ணமும் நீதிமன்றத்திற்கு வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு மாற்றவேண்டும் என மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் புதிதாகச் செல்பவர்கள் அங்கு தங்கியிருப்பதற்கு முதலில் 24 மணித்தியாலத்திற்கு மட்டும் செல்லுபடியாகும் வவுனியாவில் உள்ள பாஸ் நடைமுறைகள் இருப்பதனால் அவர் பல்வேறு பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது வழக்கில் சம்பந்தப்பட்டவருக்குப் பாதகமான சூழ்நிலை இருப்பதனால், வழக்கை வவுனியாவுக்கு மாற்ற முடியாதென தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது இராணுவ இணைப்பதிகாரிக்குச் சுட்டிக்காட்டி, பாஸ் நடைமுறைகள் தொடர்பாக உள்ள நிலைமைகள் பற்றி தெளிவுபடுத்தியதையடுத்து, பாஸ் நடைமுறைகளில் இப்போது ஓரளவு மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

### முரண்பாடான வைத்திய அறிக்கைகள்

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர்களின் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்போது, அவர்களின் வைத்திய அறிக்கைக்கும், நீதிபதியின் அவதானிப்புடன் மீள் பரிசோதனைக்கு சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து பெறுகின்ற வைத்திய அறிக்கைக்கும் இடையே பாரிய வித்தியாசம் இருப்பதையும், இது பொலிசாரின் சட்ட விரோத நடவடிக்கைக்கு வைத்தியர்கள் ஒத்துழைத்தமை அல்லது உதவி புரிந்த குற்றத்தைப் புரிந்தார்கள் என குற்றம் சாட்டப்படுவதற்கு வழிவகுக்கும். எனவே வைத்தியர்கள் யாருக்கும்

(7ம் பக்கம் பார்க்க....)

# இராமகிருஷ்ண மிஷன் பவள விழா

## ஊர்திகள்




நேற்று நடைபெற்ற இராமகிருஷ்ண மிஷன் பவள விழாவை ஒட்டிய ஊர்தி பவனி காட்சிகளை இங்கே காண்கிறீர்கள்


























மட்டக்களப்பு நாவலடி சப்த ரிஷி மண்டல வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஸ்ரீ காயத்திரி மகா யாகத்தின் போது ஸ்ரீ காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளும், இந்தியாவிலிருந்து வருகை தந்த 'பவனி' ஆச்சிரமத் தொண்டர்களும் அன்னை ராஜாம்பாள் ஸ்ரீ மதிவாணன் ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், சுவாமி முருகேசு நாட்டில் சமாதானமும், அமைதியும் வேண்டி யாகத்தீயை வளர்ப்பதை இரண்டாவது படத்திலும், பவனியிலிருந்து கொண்டு வரப்பட்ட கலசம், மணிகள் ஆகியவற்றை மூன்றாவது படத்திலும் காண்கிறீர்கள்.

**காணி விற்பனைக்கு**

அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் வீதியில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு,
இல.402,
தினக்கதிர்,
த.பெ.இல.06
மட்டக்களப்பு.

# இளவரசர் திபேந்திராதான் அரச குடும்பம் முழுவதையும் சுட்டுக் கொன்றதாக தப்பியவர் தகவல்.

(காத்மாண்டு)

**ப**ட்டத்துக்குரிய இளவரசர் திபேந்திராதான் தனது குடும்பம் முழுவதையும் சுட்டுக் கொன்றார் என்று உயிர் தப்பியவர்கள் கூறினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைகள் நிகழாமல் தடுக்க காத்மாண்டுத் தெருக்களில் இராணுவம் ரோந்து செல்கிறது. தேவைப்படுமானால் மீண்டும் ஊரடங்கு உத்தரவு போடப்படும் என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

இதே வேளை நேபாள மன்னர் குடும்பத்திற்கு ஏற்பட்ட தேசிய துயரத்தில் இருந்து மீள்வதற்கு இந்தியா முழு ஆதரவு அளிப்பதாக இந்தியா கூறியுள்ளது. ஒத்துழைப்பை மேலும் வளர்க்கவும் வலுப்படுத்தவும் நேபாளத்துடன் இணைந்து இந்தியா செயல்படவுள்ளதாக இந்திய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் நேபாள பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

நேபாளத்தின் அரச குடும்பத்தினர் கொல்லப்பட்டதை குறித்த விடையத்தில் இந்தியா விரைவாக தனது கருத்தை வெளியிட்டு விட்டது என்று கூறப்படும் கருத்தை இந்தியா மறுத்துள்ளது.

நேபாளத்துடன் இந்தியா கொண்டுள்ள நெருங்கிய உறவை கருத்தில் கொண்டு சரியான நேரத்தில் சரியான முறையில் இந்தியா தனது கருத்தை வெளியிட்டது என்று புதுடில்லியின் செய்தி தொடர்பாளர் கூறினார்.

# விடுதலைப்படைகளையும் ஜிகாத்தையும் தடை செய்ய ஜெயா கோரிக்கை

(சென்னை)

**தே**சிய ஜனநாயக கூட்டணியில் அ.இ.அ.தி.மு.க மீண்டும் சேராது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ் நாடு முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.இ.அ.தி.மு.க.சேரப் போவதாக வந்த செய்திகளில் உண்மை எதுவும் இல்லை என்றும் அந்த கூட்டணியில் சேருவதற்கான உத்தேசம் இல்லை என்றும் அவர் கூறினார்.

மக்கள் முன்னணியில் அ.தி.மு.க சேருவதற்கான வாய்ப்பு பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு முன்னணித் தலைவர்களுடன் இது பற்றி தொடர்பு கொண்டிருப்பதாக கூறினார்.

தமிழ் நாடு விடுதலைப் படை, தமிழ் நாடு மீட்புப் படை, ஜிகாத் கமிட்டி, போன்ற தீவிரவாத அமைப்புக்களை உடனடியாக தடை செய்ய வேண்டும் என்று செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியிருக்கிறார்.

நேற்று புது டில்லியில் குடியரசு தலைவர் நாராயணன் பிரதமர் வாஜ்பாயை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார்.

# உலக வர்த்தக ஒன்றியத்தில் சீனாவுக்கும் இடம்

(பீஜிங்)

**உ**லக வர்த்தக ஒன்றியத்தில் சீனாவையும் சேர்த்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமடைந்து வருவதாக ஒன்றியத் தலைவர் மைக்கல் மூர் தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஒன்றியத்தின் கூட்டத்திற்கு முன்னோடியாகவே இம்முயற்சிகள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

கடந்த 14 வருடங்களாக உலக வர்த்தக ஒன்றியத்தில் அங்கத்துவம் பெறுவதற்காக சீனா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ள கூட்டத்தின் போது ஆசிய பசுபிக் சமூகத்தின் ஆதரவை வழங்கப்போவதாகவும் திரு.மூர் தெரிவித்துள்ளார்.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள கூட்டங்களில் ஆசிக் பசுபிக் அமைச்சர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு முடிவை காண்பார்களேயானால் ஜெனிவாவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அவற்றை சமர்ப்பித்து தீர்க்கமான இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் என்றும் திரு.மூர் கூறியுள்ளார்.

சீனாவிற்கு இதில் அங்கத்துவம் கிடைக்கும் மட்டிலும் இதனை உலக வர்த்தக ஒன்றியம் என்று அழைக்க முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# பிரிட்டனில் ஆசியர் மீண்டும் தொடங்கிய கலகம் அடங்கியது

(லண்டன்)

**பி**ரிட்டனில் தேர்தல் நடக்கும் நிலையில் பிரிட்டனின் கலகம் அடக்கும் பொலிஸாருடன் ஆசிய இளைஞர் குழுக்கள் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் புறநகரமான லீப்ஸில் இடம் பெற்ற இம் மோதலில் பெருமளவான பங்களாதேஷ் இளைஞர்களுடன் 300க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மோதல்களில் ஈடுபட்ட இளைஞர்கள் பெற்றோல் குண்டுகளை வீசி 25 வாகனங்களையும் வர்த்தக நிலையம் ஒன்றையும் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணி நேரம் நீடித்த இந்த கலகத்தை கிளர்ச்சி அடக்கும் பொலிஸாரினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இன ரீதியாகவே இந்த மோதல்கள் இடம் பெற்றதாகவும் தற்போது நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ளதாகவும் கூறிய பொலிஸ் அதிகாரி மேலும் வன்முறைகள் இடம் பெறாதவாறு பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.

# விஷக்காளானுக்கு 14 பேர் பலி

(காத்மாண்டு)

**நே**பாளத்தின் கிராமம் ஒன்றில் காட்டில் முளைத்த காளான்களை சாப்பிட்டதினால் குறைந்தது 14 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விஷக் காளான்களை சாப்பிட்டு இறந்தவர்களில் எட்டுப்பேரைக் கொண்ட குடும்பமும் அடங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மற்றொரு சந்தரப்பத்தில் காத்மாண்டுக்கு சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிட்டாவின் பூங்காவில் புலி அடித்து நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

# கிராம அபிவிருத்திச் சங்க நிருவாகத் தெரிவு

**ம**ட்/மாவடிச்சேனை கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் 2001-05-20ஆந் திகதி பாடசாலை மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எம்.கலீலுர்றகுமான் தலைமையி நடைபெற்றது மேற்படி கூட்டத்தில் புதிய நிருவாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதில் பின்வருவவோர் நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

**தலைவர்:-** ஏ.பீர்.முகம்மட்
**உ.தலைவர்:-** எம்.ஜே.அல்பத்தாஹ்
**செயலாளர்:-** எம்.எம்.அமீர்
**உ.செயலாளர்:-** ஏ.எம்.பௌசுல் அமீன்
**பொருளாளர்:-** .எம்.ஐ.எம்.இலியாஸ்

**உறுப்பினர்கள்**
எம்.ஐ.ஜெய்னுதீன், என்.எல்.அசனார் எம்.எச்.ஆதம்பாவா, ஏ.எம்.சரீப் ஏ.பி.கமால்தீன், ஏ.முஸ்தபா, ஏ.உதுமாலெப்பை, எம்.ஏ.லத்தீப்

**கணக்காய்வாளர்கள்**
கே.எல்.ம.்.றூப், எம்.எச்.எம்.புகாரி

**பாதுகாவலர**
ஐ.எல்.ம.்.றூப்

# அணுசக்தி பரிசோதனைக்கு குழந்தைகளின் சடலங்களா?

(லண்டன்)

**அ**மெரிக்காவில் அணுசக்தி பரிசோதனைகளுக்காக இறந்து போன கைக்குழந்தைகளின் சடலங்கள் கடத்தப்பட்டது பற்றி விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

கொங்கொங்கில் பெற்றோரின் சம்மதம் இல்லாமல் அணுசக்தி பரிசோதனைக்காக அமெரிக்காவுக்கு இவை அனுப்பப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

1952ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டு வரையில் கொங்கொங், அவுஸ்திரேலியா, பிரிட்டன், தென்னமெரிக்கா, ஆகிய மருத்துவமனையில் இருந்து இறந்து போன சுமார் 6 ஆயிரம் கைக்குழந்தைகளின் சடலங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் செய்தித்தாள் ஒன்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இந்தச் சின்னஞ்சிறுசுகளின் சடலங்கள் அணுசக்தி பரிசோதனைக்காக பயன்படுத்தப்பட்டன. அமெரிக்காவின் எரிப்பொருட் திணைக்களம் கதிர்வீச்சு மட்டம் சம்பந்தமாக இந்த ஆய்வை நடத்தியிருக்கின்றது.

# 307 பயணிகளுடன் விமானம் வியட்நாமில் இறங்கியது

(தைபே)

**மு**ன்னூற்றி ஏழு பயணிகளுடனும் பத்தொன்பது சிப்பந்திகளுடனும் புறப்பட்ட தாயிலாந்து விமான சேவைக்கு சொந்தமான போயிங் 777 விமானம் ஒன்று அவசரமாக வியட்நாம் நகரில் தரையிறங்கியுள்ளது. எரிபொருள் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்தே இவ்வி மானம் திடீரென தரையிறங்க நேர்ந்ததாக கூறப்படுகிறது.

தாய்வான் தைபேயிலிருந்து தாய்லாந்து தலைநகர் பாங்கொக் நோக்கிப் புறப்பட்ட விமானமே இப்படி திடீர் என வியட்நாமில் தரையிறங்க நேர்ந்தது.

இதனை அடுத்து பயணிகளும் சிப்பந்திகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாகவும் விமானம் ஒரு பாதையில் பெருமளவு எரிபொருள் சிந்திக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நீதி நிருவாகத்துடன்.......

(2ம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சாமல் தமது கடமைகளை நேர்மையாகச் செய்ய வேண்டும். இதேபோல வனபரிபாலன அதிகாரிகள் செல்வாக்குகள், அச்சுறுத்தல்களுக்கு அஞ்சக்கூடாது. இவ் அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவர்களின் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இங்கு உரையாற்றிய வவுனியா அரசாங்க அதிபர் வவுனியா வரலாற்றில் இந்த கலந்துரையாடல் கூட்டம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்று தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களுக்கு முன்மாதிரியாக சிவில்நிருவாக நடவடிக்கைகள் நீதி நிருவாகத்துடன் இணைந்து செல்ல வேண்டியதன் அவசியத்தை நீதிபதி ஒருவர் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் பங்கு பற்றி விளக்கமளித்துள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இயற்கை நீதியின் வழி நின்று சிவில் அதிகாரிகள் நீதியாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தில் முக்கியமானது. அதேவேளையில் சட்ட நுணுக்கங்களின் வழி காட்டலில் தமது கடமைகளை அவர்கள் மேற்கொள்ளும் போது இந்த மாவட்டத்தின் சிவில்நிருவாகம் மேலும் சிறப்படைவதன் மூலம் பொதுமக்கள மேலும் நன்மையடைவார்கள் என்றும அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கில் மகாபொல அதிகரிப்பு


**வ**டக்கு கிழக்கு மாகாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மகாபொல புலமைப்பரிசில் நிதி அதிகரிக்கப் படவுள்ளது. முஸ்லிம், கல்வி, சமூக ஆய்வுகள் நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஆர் றஊப் ஹக்கீமைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த அதிகரிப்பு செய்யப்படவுள்ளது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மகாபொல நிதியத்தைத் தவிர வேறு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் இக்காலகட்டத்தில் இக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, மேற்படி அதிகரிப்பை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைப்பின் அம்பாறை மாவட்ட தலைவர் யு.எல்.எம்.ஆஹிர் தெரிவித்தார்.

## வாரம் ஒரு பாடசாலை

# மட்/எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே பதினாறு கல் தொலைவில் அமைந்துள்ளதே எருவில் கிராமம் ஆகும். இக் கிராமம்




12 வருடங்களாக தொடர்ந்து இப்பாடசாலையின் அதிபராக இருக்கும் எஸ்.பரமானந்தம் அலுவலகத்தில்

பழைமையும் சிறப்பும் மிக்க ஒன்றாகும். இதன் பழைமையைப் பறை சாற்றுவது போல் ஊரின் நடுவே கண்ணகி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. இதே இவ்வூரின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக மட்/எருவில் கண்ணகி மகா வித்தியாலயம் நெடிதுயர்ந்து நிற்கின்றது. இப்பாடசாலையின் உயர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன காலாக அமைந்துள்ளன. எனவே இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையை ஒரு முறை திரும்பிப் பார்ப்பது பொருத்தமுடையதாகும்.

எருவில் கிராமத்தில் சைவப் பாடசாலை ஒன்று இல்லாமையை உணர்ந்த இக்கிராமத்தைச் சேர்ந்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சோ.உ. எதிர்மன்னசிங்கம் ஊர்ப் பெரியார்களின் உதவியுடன் தேக்கஞ் சோலைக்குச் சென்று தேக்கு மரங்களைக் கொணர்ந்து 20'X100' அளவிலான



அதிபருடன் ஆசிரியர்கள்


ஓலைப் பாடசாலை ஒன்றை அமைத்தார். இது 1949ம் ஆண்டு 06ம் மாதம் 06ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகும். ப.பவளசிங்கம் அவர்கள் அதிபராகவும், வீ.விஸ்வலிங்கம், எஸ்.தினகரம்பிள்ளை, கே.செல்லையா, டபிள்யூ.நவரெத்தினம், செல்வி எஸ். இராசம்மா ஆகியோர் ஆசிரியரா கவும் கடமை புரிய 217 மாண வர்கள் ஆரம்பக் கல்வியை முதலில் ஆரம்பித்தார்கள். இவர் அதிபராக இருந்த காலத்தில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை வகுப்புக்கள் நடைபெற்றன. ப.பவளசிங்கம் அவர்கள் 01-01-1995 வரை தனது பணியை செய்து வந்தார். அவரைத் தொடர்ந்து 1955-01-01 - 1958-08-02 வரை ஜே.கே.தம்பிராசா அதிபராக இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் முன்னைய வகுப்புக்களே நடைபெற்றன. அதன் பிறகு 02-08-1958 முதல் 30-06-1962 வரை எஸ்.தம்பாப்பிள்ளை அவர்கள் அதிபராக இப்பாடசாலைக்கு வந்து இப்பாடசாலை வளர்ச்சிக்கு பாடுபட்டார். அதன் பிறகு ஆரம்ப அதிபரான வீ.பவளசிங்கம் மீண்டும் இப்பாடசாலையை 30-06-1962 வருகை தந்து அதிபர் பொறுப்பை ஏற்று வகுப்பு 1-6 வரை பாடசாலையை தரம் உயர்த்தினார். இவர இக் கிராமத்தை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு பின்னர் 1963-05-01 முதல் 1970-06-06 வரை பீ.சுப்பிரமணியம் அவர்கள் நியமிக்கப்பட்டார். ஓலைக் கொட்டகையில் 1970 காலப்பகுதியில் இரண்டு நிரந்தர கட்டிடங்கள் கட்டப்பட்டன. எம்.இளையதம்பி 27-06-1970 - 01-08-1971 வரை அதிபராக இப்பாடசாலையில் கடமையாற்றினார். இவர் வகுப்பு 1-7 வரை வைத்து பாடசாலையின் தரத்தை வளப்படுத்தினார். அக்கால கட்டத்தில் ஆர்வத்துடன் மாணவர்கள் கல்வி கற்கவில்லை. காரணம் சில குடும்பங்களின் பிள்ளைகள் வெளிப்பாடசாலையில் கற்று வந்ததனால் பாடசாலையில் கல்வி மந்த நிலை காணப்பட்டது. இதன் பிறகு எஸ்.நல்லதம்பி 01-07-1071 முதல் 01-01-1972 வரை அதிபராக இருந்து ஆண்டு 8 வரை வகுப்புக்களை உயர்த்தினார். அதன் பின் மூன்று மாதங்களுக்கு எஸ்.தம்பிராசா அவர்கள் அதிபராக கடமையாற்றினார். அதன் பின்னர் ரி.கேசவப்பிள்ளை அதிபராக கடமை ஏற்று 01-01-21976 வரை கடமையாற்றினார். எமது வித்தியாலயம் 8ம் வகுப்பு வரை கொண்டு மிளிர்ந்தது. ஆனால் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு, பாடசாலை சூழல் அழகுபடுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த 1976 - 1982க்கு இடைப்பட்ட காலத்தில் வி.அம்பலவன் அதிபராக கடமையாற்றினார். இவர் தமது கடமையை செவ்வனே நிறைவேற்றி வந்தார். அகோரச்சூறாவளியடித்த காலத்தில் இரண்டு நிரந்தரக் கட்டிடங்களும் இடிந்து சேதத்துக்கு உள்ளானமையினால் தற்காலிகமாக மரம் தடிகள் வாங்கி இரண்டு பெரிய கொட்டகைகள் அமைத்து மாணவர் கல்வி மேம்பாட்டுக்கு வழிகோலினார். 1979 களில் வகுப்பு 9 வரை வைத்தார். ஆனால் முதலாம் தவணைக்குள்ளே ஆசிரியர் போதாமையினால் அந்த வகுப்பு கலைக்கப்பட்டு அவர்கள் பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டனர். முதல் முறையாக இல்ல விளையாட்டுப் போட்டியும் முதல் முறையாக இவரது காலத்திலே நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் பின் க.இராசநாயகம் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் ஒரு வருட காலம் தமது பணியை இப்பாட





பாடசாலை மாணவர்களின் காலைப் பிரார்த்தனை

சாலை வளர்ச்சிக்காக செய்தார். இவரே தற்போதைய பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரைத் தொடர்ந்து வி.தங்கராசா, ஆர்.ஆறுமுகம் ஆகியோர் 1982 தொடங்கி 1984 வரை அதிபர்களாக சேவையாற்றினார்கள். அதன் பின் அதிபர் பதவியை பொறுப்பு ஏற்ற எம்.கணேசதுரை வகுப்புக்களை 1-6 வரை மாத்திரமே வைத்தார். அதன் பின் எஸ்.சோம நாதன், எஸ்.குணசிங்கம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றினார்கள். எஸ்.குணசிங்கம் வகுப்பு 6 லிருந்ததை வகுப்பு 7 வரை உயர்த்தி 1987 வரை கடமையாற்றினார். பின் கே.யோகநாதன் தனது இரண்டு ஆண்டு அதிபர் சேவையில் பாடசாலையின் வகுப்புக்களை மீண்டும் 8 வரை உயர்த்தி பாடசாலையின் வளர்ச்சிக்கு புத்துயிர் கொடுத்தார். இவரால் இடப்பட்ட அத்திவாரம் இவர்க்கு பின் 16-06-1989 அதிபராக வந்த சா.பரமானந்தத்தினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இன்று வரை அவரது சேவை தொடர்ந்து இயங்கி வருகின்றது. பல முன்னேற்றமும் கண்டுள்ளது. இவர் இதே கிராமத்தைச் சேர்ந்தவர் பாடசாலை வளர்ச்சியில் இது தெரிகின்றது.






பாடசாலையின் முன் முகத்தோற்றம்

இந்த நிலையில் பாடசாலை காணி போதாமையால் அருகிலுள்ள இரு காணித்துண்டுகளும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தாலும் வேறு வழிகளிலும் விலைக்கு வாங்கப்பட்டது. சுற்று மதில் அமைக்கப்பட்டது. விளையாட்டுத் துறையை வளப்படுத்துவதற்காக விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. 1949-06-06 இல் மட்/எருவில் அ.த.க பாடசாலை என அழைக்கப்பட்ட இப் பாடசாலை 1991-10-25 இல் மட்/எருவில் பதியை ஊகிக்க வந்த கண்ணகித் தாயின் அருளால் மட்/எருவில் கண்ணகி வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1996-11-25 இல் மட்/எருவில் கண்ணகி மகா வித்தியாலயம் என பெயர் மாற்றப்பட்டு இப்போது நிலையில் உள்ளது. 1-8 வரை இருந்த பாடசாலை 1990-04-25 இல் ஆண்டு 9-11 வைப்பதற்கு அதிபரின் விடா முயற்சியால் அனுமதி கிடைத்தது. அதன் பின் 1995-06-30 இல் க.பொ.த (உ-த) வைப்பதற்கான அனுமதி கிடைத்தது. இது 07-06-1996 இல் நிரந்தர அனுமதி அளிக்கப்பட்டு 1-13 ஆண்டு வரை இப்பாடசாலையில் வகுப்புக்கள் சிறந்த முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது. ஆண்டு 5 இல் இருவர் மூவர் என புலமைப்பரிசில் சித்தி பெற்று வருகின்றனர். க.பொ.த .(சா-த) பரீட்சைகளிலும் சகல துறைகளிலும் மாணவர்கள் தெரிவாகிக் கொண்டு செல்கின்றனர். அண்மையில் 2000ம் ஆண்டில் நடந்தேறிய க.பொ.த.(சா-த) பரீட்சையில் 30 மாணவர்கள் உயர்தரம் படிப்பதற்குத் தெரிவாகியுள்ளனர். அதே போன்று க.பொ.த (உ-த) ஆரம்பமான முதல் வருடமே ஒருவர் பல்கலைக்கழகத்துக்கும், கணிசமானவர் கல்விக்கல்லூரிக்கும் தெரிவாகிச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போதைய அதிபரின் விடாமுயற்சியால் 06-06-1999இல் பாடசாலையின் பொன் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது உலக கனேடிய பல்கலைக்கழகத்தால் கை அச்சி முறை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இப்பகுதியில் வாழும் மக்கள் நன்மை அடைந்து வருகின்றார்கள்.21 இளைஞர் யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பாடசாலை 1949ம் ஆண்டு 217 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், இன்று 1108 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆரம்பம் முதல் இன்று வரை 18 அதிபர்கள் இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளனர். தற்போது 42 நிரந்தர ஆசிரியர்களுடனும், பகுதி நேர ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் 3 பேருடனும், கல்வி சாரா ஊழியர்கள் நால்வருடனும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

**தகவல்:-**
*அதிபர்*

**தொகுப்பு:-**
களுவாஞ்சிகுடி நிருபர்
*எஸ். ரவீந்திரன்*
(எச்.என்.டி.மெக்.புரட்.இங்கிலாந்து)

**படப்பிடிப்பு:-**
*கி. ஜெயசீலன்*

# அலஸ்தோட்ட முகாம் அகதிகளை......

## குச்ச வெளியில் குடியமர்த்த முயற்சி

(திருமலை நிருபர்)

திருகோணமலை நகருக்கு 2 கிலோ மீற்றர் தொலைவில் வடக்கே உப்புவெளிக்கு அருகில் உள்ள அலஸ்தோட்ட அகதி முகாமை மூடிவிட்டு அங்குள்ள சுமார் 470 குடும்பங்களைச் சேர்ந்த 1500க்கு அதிகமான அகதிகளையும் குச்சவெளி பிரதேசத்தில் குடியமர்த்தும்படி பாதுகாப்பு அதிகாரிகள் திருகோணமலை மாவட்ட சிவில் அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர். இந்த அகதி முகாமை ஐ.நா. அகதிகள் தூதராலயம் பராமரித்து வருகின்றது.



படையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஒரு பிரதேசத்தில் இருந்து பொதுமக்களையோ அல்லது அகதி முகாமிலிருந்து அகதிகளையோ அகற்ற முடியாது என்று சிவில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குறைந்தது பதினேழு கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் 1992 இல் படையினரின் இராணுவ நடவடிக்கையின்போது அச்சம் காரணமாக சொந்த இடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் டைந்தனர். வேறு சிலர் தமிழ்நாட்டை படகுகளில் சென்று அடைந்தனர். தமிழ்நாட்டை தஞ்ச மடைந்தவர்களில் பலர் பின்னர் இலங்கைக்கு திரும்பி வந்து சொந்த கிராமங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாது அலஸ்தோட்ட அகதி முகாமில் தங்கியிருந்து வருகின்றனர். அவர்களையே முகாமிலிருந்து வேறு இடத்திற்கு, குறிப்பாக குச்சவெளிப் பிரதேசத்தில் குடியமர்த்தும் படி படையினர் திருகோணமலையின் சிவில் அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

அதற்கு சிவில் அதிகாரிகள் இணக்கம் தெரிவிக்கவில்லை. அகதி ஒருவரை மீளக்குடியமர்த்துவதனால் முதலில் அந்த அகதி தனது சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும். அகதி யின் சம்மதத்தைப் பெறாமல் அகதி ஒருவரை மீளக்குடியமர்த்த முடியாது என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு திருகோணமலை மாவட்டத்தில் அக்தி முகாம்களில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை மீளக்குடியமர்த்துவது பற்றிய தனது நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. தற்போதைய யுத்தம் முடிவுக்கு வந்து இயல்பு நிலை திரும்பும் வரை அகதிகளை மீளக்குடியமர்த்த முடியாது. அவ்வாறு மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கு போதுமான பாதுகாப்பை வழங்கும் நிலையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவும் இல்லை என்று திருகோணமலையில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் திருகோணமலை பொறுப்பதிகாரி டானியல் சிறைபர் தெரிவித்தார்.



ஐ.சி.ஆர்.சி.பொறுப்பதிகாரி டானியல் சிறைபர்

ஆலஸ்தோட்ட அகதி முகாம் அகதிகள் பலர் திருகோணமலையில் உள்ள ஈழமக்கள் ஜனநாயக மக்கள் கட்சியின் (ஈ.பி.டி.பி.) அமைப்பாளரிடம் சென்று தங்கள் நிலையைத் தெரிவித்தனர். எக்காரணங் கொண்டும் அகதி முகாமை விட்டு வெளியேறப் போவதில்லை என்றும் இந்த அகதிகள் தெரிவித்தனர்.

# யாழ் குடிசன மதிப்பீட்டை நிறுத்துமாறு மனித நேய அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள குடிசன மதிப்பீட்டை நிறுத்துமாறு கோரி சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுப்பதென இன்று யாழ் மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் யாழ் மாவட்ட அரச சார்பற்ற இணையத்தின் அலுவலகக் கட்டிடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குடாநாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வெளியிடங்களிலும் அகதி முகாம்களிலும் வாழ்ந்து வருகின்றனர். பலர் காணாமல் போயுள்ளனர். மேலும் பலர் சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம் களிலும் உள்ளனர் இந்நிலையில் சிறிலங்கா அரசு குடிசன மதிப்பீட்டைச் செய்வதன் மூலம் தமிழ் மக்களை மேலும் நசுக்கி சனத் தொகை விகிதத்தை குறைப்பதற் கே திட்டமிட்டுள்ளது.

எனவே இக்குடிசன மதிப்பீட்டை நிறுத்துமாறு ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கோருவதெனவும் இது தொடர்பாக வெளிநாட்டுத் தூதரகங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 'யாழ் மனித உரிமைகள் அரங்கு' என்ற அமைப்பை உரு வாக்கி அதன் மூலம் மனித உரிமை மீறல்களை வெளியுலகுக்குக் கொண்டு வருவதெனவும் இந்த அமைப்பு எந்தவித அரசியல் சார்புமில்லாமல் இயங்குவதெனவும் அரசின் அடக்கு முறைகளுக்கு மக்களை அணிதிரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதகுருமார், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கதிர்காம யாத்திரிகர்கள் தாளங்குடாவில் தங்க வசதி

(அரியம்)

கதிர்காம திருத்தலத்திற்கு பாத யாத்திரை செல்லும் அடியார்களின் நன்மை கருதி தாழங்குடா சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தில் அமைந்துள்ள நிஷ்தம் தேவஸ்தானத்தில் தங்கிச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள தாளங்குடாவில் சரீரம் தேசிய மன்றத்தின் தலைமைக் காரியாலயத்தில் இத்தேவஸ்தானம் அமைந்துள்ளது.

தங்குமிடவசதி மற்றும் ஏனைய வசதிகளைப் பெற விரும்பும் அடியார்கள் ஏககாலத்தில் தர்மகர்த்தா சபை நிஷ்தம் மகாவிஷ்ணு தேவஸ்தானம் பிரதான வீதி தாளங்குடா எனும் முகவரியுடனும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் அடியார்கள் 065-46677 இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என சரீரம் தேசிய மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆ.லோகேஸ்வரன் தினக்கதிருக்கு தெரிவித்தார்.

# கல்லடி இராமகிருஷ்ண ஆச்சிரமத்தில் பக்தி ஆராதனை

(அரியம்)

மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் பவள விழாவினையொட்டி பக்திப் பாடல்களுடன் நேற்றுக் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்நிகழ்வில் மங்கள கொடியேற்றல் என்பவைகளைத் தொடர்ந்து பூசை ஆரம்பமானது அதனைத் தொடர்ந்து ஹோமம், ஆதி என்பனவும் வெகு சிறப்பாக நேற்று முன்தினம் பகல் வரை இடம் பெற்றது.

இவ்விழாக்களின் நிகழ்வுகளில் அகில உலக ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்த மகராஜ் கலந்து சிறப்பித்ததுடன் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளான பவள விழாக்குழு தவிசாளர் சுவாமி ஜீவனாந்த மகராஜ், ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜி மகராஜ் ஆகியோர்களும் பங்குபற்றினர்.

நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இந்நிகழ்வுகளில் இராமகிருஷ்ண மிஷன் மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

பக்தி பூர்வமாக இடம் பெற்ற இந்நிகழ்வானது அங்கு குழுமியிருந்த மக்களை ஆத்மீக சிந்தனைக்கு இட்டுச் சென்றதை அறியக் கூடியதாக இருந்தது.

# சமூக நல உத்தியோகத்தர்களின் இடை நிறுத்தத்தை தடை செய்யக் கோரி மனு

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக நலத் தயாரிப்புத் திட்டத்தில் சேவை புரிகின்ற 157 உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதைக் கண்டித்தும், இந்த தடை நிறுத்தலை தடை செய்யுமாறு கோரும் மனு ஒன்றை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமூக நல தயாரிப்புத் திட்டமானது கடந்த 10 வருட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் 7245 ஏழைக் குடும்பங்கள் நன்மை அடைந்து வருகின்றன. இத்திட்டத்திற்கான நிதியை வழங்கும் 'நோறாட்' அமைப்பானது தொடர்ந்து செயற்படுத்துவதற்கு தயாராகவுள்ளது. அத்துடன் இது தொடர்பான மாகாண சபையினதும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்த நிலையில் இத் திட்டத்தினை எதுவித முன்னறிவித்தலும் இன்றி 1-06-2001 முதல் இடை நிறுத்தும் படி திட்ட செயற்படுத்துகை அமைச்சின் செயலாளரினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் பேசியதை அடுத்து எதிர்வரும் 11ம் திகதிக்கிடையில் இடை நிறுத்தப்பட்டவர்களை மீண்டும் வேலையில் சேர்த்து கொள்ள உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாக மேற்படி திட்டப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

# இலவசக் கல்வி கருத்தரங்கு

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்திக் கழகத்தினரால் இவ்வருடம் உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களின் நலன் கருதி இலவசக் கல்விக் கருத்தரங்கொன்றினை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் யூன் 5ம் திகதி முதல் ஜூலை 5ம் திகதி வரை இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இவ் இலவசக் கல்விக் கருத்தரங்கில் கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதப்பிரிவு மாணவர்களுக்கான விரிவுரைகள் பிரபல ஆசிரியர்களால் நிகழ்த்தப் படவுள்ளதாக கழக செயலாளர் ஏ.கிருபாகரன் தெரிவித்தார்.

# நன்றிக் கடனுக்காக உயிர் போனது

இருதய சிகிச்சைக்காக திருகோணமலையில் உள்ள ஒரு பொது சேவை நிறுவனத்தின் உதவியுடன் இந்தியா சென்று சிகிச்சை பெற்று வந்த பெரிய கல்லாற்றைச் சேர்ந்த பூ.திலகரெட்ணம் வயது (65) என்பவர் நன்றி மறவாது அதே நிறுவனத்திற்கு சேவை செய்ய சென்றவர் அங்கு இருதய நோய்க்கு உட்பட்டு உயிரிழந்த பரிதாப சம்பவம் செவ்வாயன்று திருகோணமலையில் நடைபெற்றுள்ளது. மூன்று மாதங்கள் முழுமையாக ஓய்வெடுக்க வேண்டுமென இந்திய டாக்டர்களின் ஆலோசனையையும் பொருட்படுத்தாது சேவையாற்ற சென்றதாலேயே ஏற்பட்டிருக்கின்றதென குடும்பவத்தவர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த நிறுவனம் பிரேதத்தை கல்லாற்றுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளது. இவர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஹோமியோபதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாசகர் நெஞ்சம்

## கல்முனை பிரதேச செயலாளர் விளக்கம் தருகிறார்

**05.06.2001** தினக்கதிர் பத்திரிகையில் 7ம் பக்கம் வெளியான "கல்முனைப் பிரதேசத்தின் அவலம்" எனும் தலைப்பிலான கடிதத்தில் கூறப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் வேண்டும் என்று எழுதப்பட்ட ஒரு குற்றச்சாட்டாகவே தெரிகிறது.

எமது அலுவலகத்தால் வழங்கப்படும் சேவைகளில் எவ்வித இன,மத,அரசியல் வேறுபாடுகளும் கிடையாது.

இங்கு எந்த நடவடிக்கைகளிலும் இலஞ்சம், மோசடி, பாரபட்சம் கிடையாது. அவ்வாறு யாராவது அறியத்தந்தால், அது பற்றி உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு 3 தொலைபேசி இணைப்புக்கள் உள்ளன என்றும், இவை மூன்றும் பிரதேச செயலாளரின் பாவனையிலேயே உள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் தவறு. ஒரு தொலைபேசியின் பாவனையை செல்வைக் குறைக்கும் நோக்கத்துடன் 2000 டிசம்பரிலேயே துண்டித்துவிட்டோம். இன்னுமொரு தொலைபேசி கீழ் மாடியில் உள்ள எமது கணக்காளரின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றைய தொலைபேசியே எனது பாவனையில் உள்ளது. அதுவே பெக்ஸ் ஆகவும் பாவிக்கப்படுகிறது.

கல்முனை நகரசபை வேறொரு நிறுவனம் ஆகும். கல்முனை நகர சபையின் அபிவிருத்திகள் யாவும் நாடு நகர அபிவிருத்தித் திணைக்களத்தினாலேயே திட்டமிடப்படுகின்றன; இந் நடவடிக்கைகளில் யாரும் தலையிட முடியாது.

நிருவாக உத்தியோகத்தர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோருக்குக் கடமைகள் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவறு. இவர்கள் இருவரும் மிகுந்த சந்தோஷத்துடன் தினமும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெரியதொரு நிறுவனத்தில் கடமைகளைப் பகிர்ந்தளிக்காமல் பிரதேச செயலாளரால் மாத்திரம் எல்லாக் கடமைகளையும் மேற்கொள்ள முடியாது.

வருடந்தோறும் இலட்சக்கணக்கான ரூபாய்கள் காகிதாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதுவும் தவறானது. இப்போது அனைத்துத் தேவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாண்டில் காகிதாதிகளுக்காக ரூபா 75,000.00 மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்தே கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகம், 76 கிராம சேவை அதிகாரிகள், 50 உத்தியோகத்தர்கள் ஆகிய அனைவருக்கும் காகிதாதிகள் வழங்க வேண்டியுள்ளன.

இவ் அலுவலகத்தில் 3 கணனிகள் உள்ளதாகவும் இவை மூன்றும் எனது தனிப்பட்ட வேலைகளுக்குப் பாவிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவும் தவறானது. இக்கட்டிடத்தில் பிரதேச செயலகத்தைத் தவிர மேலதிகமாக 2 அலுவலகங்கள் இயங்குகின்றன.

1. வ.கி.மாகாண ஆளுனரின் ஆணையாளர் அலுவலகம்
2. மாவட்ட கைத்தொழில் திணைக்களம்.

இவை இரண்டின் பாவனையிலும் தலா ஒவ்வொரு கணனிகள் உள்ளன. இவற்றைப் பாவிப்பதில் எவ்வித தடைகளும் இல்லாத போதிலும் ஒரு நாளேனும் எனது வேலைகளையோ, எனது அலுவலக வேலைகளையோ அவற்றில் செய்ததில்லை.

எனது அலுவலகக் கடிதங்கள் யாவும் கணனியிலும், தட்டச்சு இயந்திரத்திலும் தயாரிக்கப்படுகின்றன. இதில் எந்தத் தவறும் இல்லை. வேலைச்சுமை, அவசர நிமித்தம் என்பவற்றிற்கேற்ப கடமைகள நடந்தேறுகின்றன.

நான் ஒரு சாதாரண எழுத்தாளன். இதுவரை எனது 16 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை அனைத்துமே கொழும்பில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டவை ஆகும். ஒவ்வொரு புத்தகத்தின் மட்டையின் பின்புறத்திலும் அச்சகத்தின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்களை இடமாற்றும் பொறுப்பு மாகாண சபைக்கும், மத்திய அரசுக்கும் உரியது. அதற்கான அதிகாரம் பிரதேச செயலாளருக்கு இல்லை.

புனரமைப்பு வேலைகளிலும் பாரபட்சம் காட்டப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதுவும் தவறானது. கடந்த காலங்களில் புனரமைப்பு வேலைகள் எதுவும் எமது அலுவலகத்தால் செய்யப்படவில்லை. அவை யாவும் அம்பாறையில் உள்ள திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தினாலேயே செய்யப்பட்டன.

பொது மக்களுக்குத் தங்கள் குறைகளை எழுதுவதற்கு நிறையவே உரிமை உண்டு. அதனை ஒரு எழுத்தாளன் என்ற வகையில் மிகவும் மதிக்கிறேன். ஆனால் அரசாங்கத்தின் முக்கியமான நிறுவனமொன்றைக் குறை கூறும் போது மிகத்தெளிவாக தகுந்த ஆதாரங்களுடன் கூறுவதே சிறப்பாகும். இல்லாவிட்டால் நினைத்த எவருமே நினைத்த அலுவலகத்தைப் பற்றி இலகுவாகவே குறைகூறமுடியும்.

**ஏ.எல்.எம்.பளீல்**
**பிரதேச செயலாளர்**
**கல்முனை**

### கல்முனை பஸ் டிப்போ வீதியின் நிலை

கல்முனை நகரத்தில் உள்ள பிரதானமான வீதிகளில் ஒன்றான பஸ் டிப்போ வீதி நிண்டகாலமாக செப்பனிடப்படாமல் இருப்பது கண்டு பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பஸ் டிப்போ கல்முனை தமிழ் பிரதேச செயலகம் இலங்கை வங்கி, மாதா கோவில், கல்வி அலுவலகம், தபால் அலுவலகம் மிருக வைத்திய சாலை என பல முக்கிய அலுவலகங்கள் இந்த வீதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது மழை காலங்களில் இவ்வீதி வழியே நீர் தேங்கி நிற்பதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் ஆகவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இத்தெருக்களை சீர் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

**கேதீஸ்**
**பாண்டிருப்பு**

## மருத்துவமனை பற்றிய கடிதம் வெறும் பொய்


"தினக்கதிர்" பத்திரிகையின் 7ம் பக்கத்தில் 'எமக்கு நீதி கிடைப்பது எப்போது?' எனும் தலைப்பின் கீழ் திருமதி கிளேரா ஞானப்பிரகாசம், இருதயபுரம், மட்டக்களப்பு எனும் பெயரிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ள கடிதம் கண்டு வியப்பும், விசனமுமடைந்தோம்.

நான் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தனியார் மருத்துவமனையின் தாதியருள் ஒருவராகப் பணியாற்றுபவள். ஆனால் நான் இக் கடிதத்தைப் பிரசுரிக்கும்படி அனுப்பவில்லை. யாரோ ஒரு விஷமி எனக்கும் அம் மருத்துவமனை நிர்வாகத்துக்குமிடையில் பிணக்கை ஏற்படுத்தும் நோக்குடன் கையாண்ட கீழ்த்தரமான முயற்சியாகும் இது. அப்பிரசுரத்தில் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் யாவும் பொய்யானவையாகும். அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சம்பளத்தைவிட மிகவும் அதிகமாக நிர்வாகம் சகல ஊழியர்களுக்கும் வழங்குகின்றது. இதுவரை நீதி, நியாயம் கேட்டு எவரும் தண்டிக்கப்படவில்லை. நீதி, நியாயம் கேட்காதவாறு நிர்வாகம் ஊழியருடன் நேர்மையாகவும், தயவாகவும் நடந்து கொள்கின்றது.

நான் தற்பொழுது சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளேன் என்பது அப்பட்டமான பொய் யாகும். நான் சேவையில் சேர்ந்த நாள் தொட்டு இதுவரை எந்தவொரு காரணத்திற்காகவும் நிர்வாகம் என்னை எவ்வகையிலும் தண்டித்தது கிடையாது. அப்படி இருக்கையில் இப்படி முட்டாள் தனமான ஒரு பொய் என் பெயரில் பிரசுரிக்கப்பட்டிருப்பது வேதனை தருகின்றது.

எனது கணவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதும், அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தார் என்பதுவும் பிழையானவையாகும். எனது கணவர் பிரயாணம் செய்த வண்டியினுள் ஒரு கைக்குண்டு வெடித்ததனால் அவர் இறந்தார் என்பதுவும், அவர் உயிர் நீத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன என்பதுவும் தான்

**திருமதிகிளேரா ஞானப்பிரகாசம்**
**வனத்து அந்தோனியார் வீதி,**
**கருவேப்பங்கேணி.**



# விளையாட்டுச் செய்திகள்



## இலங்கை வரும் இந்திய நியூசிலாந்து அணிகள்

(ச.பிரகாஸ்)

இலங்கையில் நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ள இவ்விரு அணிகளும் ஜூலை 15ம் திகதி அளவில் இலங்கை வருகின்றன.

இப்போட்டியில் டெஸ்ட் தொடரில் மட்டும் நியூசிலாந்து அணி பங்குபற்றாது என்பது குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டியில் இலங்கை இந்திய அணிகள் மோதிக்கொள்ளும்.

இப்போட்டி ஒகஸ்ட் 14-18 வரை காலியிலும் இரண்டாவது டெஸ்ட் போட்டி 22-26 வரை கண்டியிலும் மூன்றாவது போட்டி ஒகஸ்ட் 02 வரை நடைபெறும். அதற்கு முன்பதாக ஒருநாள் போட்டிகள் ஜூலை 18 ஒகஸ்ட் 04 வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. போட்டி விபரம் பின்வருமாறு.

| காலம் | அணிகள் | இடம் |
|---|---|---|
| ஜூலை 18 | இலங்கை எதிர் நியூசிலாந்து | பிரேமதாச மைதானம் |
| ஜூலை 20 | இந்தியா எதிர் நியூசிலாந்து | பிரேமதாச மைதானம் |
| ஜூலை 22 | இலங்கை எதிர் இந்தியா | பிரேமதாச மைதானம் |
| ஜூலை 25 | இலங்கை எதிர் நியூசிலாந்து | தம்புள்ள மைதானம் |
| ஜூலை 26 | இலங்கை எதிர் இந்தியா | தம்புள்ள மைதானம் |
| ஜூலை 27 | இந்தியா எதிர் நியூசிலாந்து | தம்புள்ள மைதானம் |
| ஜூலை 30 | இலங்கை எதிர் நியூசிலாந்து | எஸ்.எஸ்.சி.மைதானம் |
| ஜூலை 31 | இந்தியா எதிர் நியூசிலாந்து | எஸ்.எஸ்.சி.மைதானம் |
| ஒகஸ்ட் 02 | இலங்கை எதிர் இந்தியா | எஸ்.எஸ்.சி மைதானம் |
| ஒகஸ்ட் 04 | இறுதிப் போட்டி | பிரேமதாச மைதானம் |

## றொபின் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது

(கல்லாறு நிருபர்)

குறுமண்வெளி றொபின் விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்து நடாத்திய, கழகங்களுக்கிடையேயான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் றொபின் விளையாட்டுக் கழகமே வெற்றியும் பெற்றுள்ளது.

10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தி அண்மையில் குறுமண்வெளி பொது விளையாட்டு மைதானத்தில் 15 கழகங்கள் பங்குபற்றிய மேற்படி போட்டி ஆரம்பத்தில் 'நொக்கவுட்' முறையில் நடாத்தப்பட்டு மூன்று கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட மூன்று கழகங்களும் 'லீக்' முறையில் மோதின. இறுதிப் போட்டிக்கு கல்லாறு விளையாட்டுக் கழகமும், குறுமண்வெளி றொபின் விளையாட்டுக் கழகமும் தெரிவாகி மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்லாறு விளையாட்டுக் கழகம் 47 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய குறுமண்வெளி விளையாட்டுக் கழகமும் 9.1 ஓவரில் 48 ஓட்டங்களைப் பெற்று வெற்றி வாகை சூடியது.

சவால் கிண்ணத்தை குறுமண்வெளி விளையாட்டுக் கழகம் சுவீகரிக்க, இரண்டாவது இடத்திற்கான கிண்ணத்தை கல்லாறு விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

பிரதம விருந்தினராக களுவாஞ்சிகுடி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே.ஈஸ்வரன் கலந்து கொண்டு சவால் கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

# சோதனைக் கெடுபிடிகளால் பாடசாலை செல்வதில் யாழ் மாணவர் தாமதம்.

(யாழ் நிருபர்)

**காலை நேரத்தில் நடைபெறும் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகளினால் பாடசாலைகளுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாதுள்ளது. இவ்வாறு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் (சிறுவர் உரிமைகள்) கூட்டத்தில் கலந்துகொண்ட சிறுவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் இயங்கும் இந்தக் குழுவில் யாழ்.மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சிறுவர் பிரதிநிதிகள் ஒவ்வொருவர் யுனிசெப், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட 35 பேர் அங்கம் வகிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் இந்தக் குழுவின் கூட்டம் யாழ்.செயலகத்தில் நடைபெற்று வருகிறது. அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்ட விடயம் வலியுறுத்தப்பட்டது. கூட்டத்தில் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறிய சிறுவர்களே இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டினார்கள். ஆலயங்கள் மற்றும் இடங்களில் தேவையற்ற நேரங்களில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதினாலும், மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுவதினாலும் தமது கல்வியில் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் சிறுவர்களால் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.



நேற்று 3.45 மணியளவில் திருமலை வீதியில் உள்ள தாண்டவன் வெளிச்சந்தியில் மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கர வண்டியும் எதிர்,எதிரே மோதிக் கொண்டதில் திமிலைதீவைச் சேர்ந்த திருச்செல்வம் என்பவர் பலத்த காயங்களுடன் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கர வண்டியும் மோதுண்டு கிடப்பதை படத்தில் காண்க.

## தடையை நீக்குமாறு தென்னிலங்கை அமைப்புக்கள் கோரிக்கை

(நமது நருபர்)

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென தென்னிலங்கையைச் சேர்ந்த 31 அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்றுக் கொழும்பில் ஐந்த நட்சத்திர விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

### புலிகள்....

உடனடியாக புலிகள் மீதான தடையை நீக்கினால் அதனால் அரசுக்கு எதிரான சக்திகளின் எதிர்ப்பினை அரசாங்கம் சந்திக்க வேண்டிவரும் என்ற கருத்தம் அரசுக்கு இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்பு வந்துள்ள நோர்வேப் பிரதிநிதிகள் வன்னி செல்வார்களா என்பது பற்றி எதுவித தகவல்களும் வெளியாக வில்லை.

### வாகன ஊர்தி......

இல்லமண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்தஜி மகராஜ் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

## மூதூரில் பதற்றம்

மூதூரில் புதன்கிழமை கடை ஒன்றில் இருந்த அநாதரவான 'பார்சலால்' சிறிது நேரம் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பார்சலினுள் குண்டு இருப்பதாகச் செய்தி பரவியதை அடுத்தே அங்கு பதற்றம் ஏற்பட்டது. இது குறித்து உடனடியாகப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு விரைந்த படையினர் 'பார்சலை' எடுத்து மூதூர் இறங்குதுறைப் பகுதியில் வீசினர். ஆனால் அதிலிருந்து குண்டு எதுவும் வெடிக்காததை அடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் வரவழைக்கப்பட்டு 'பார்சல்' சோதனை செய்யப்பட்டது. அதற்குள் இருந்து மணிக்கூடு ஒன்று மட்டுமே மீட்கப்பட்டது.

### ஏறாவூரில்.....

சுடப்பட்டவர் ஏறாவூரைச் சேர்ந்த உதுமா லெப்பை அதீஸ் (30) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது. நேற்றிரவு மேற்படி இளைஞர் தனது நண்பர் ஒருவருடன் கதைத்து கொண்டிருந்த போதே இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார். முதுகுப் பகுதியில் பலத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட இவர் மட்டக்களப்பு அரச போதனா வைத்திய சாலையின் அவசர சத்திர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### சம்மாந்துறை.......

அஸ்தலத்லேயே பலியானார்.

இவர் இரு பெண்குழந்தைகளில் தந்தை எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் சம்மாந்தமாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக சம்மாந்துறை பொறுப்பதிகாரி எச்.எல்.ஜமால்தீன் தகவல் தெரிவித்தார்.

ஸ்தலத்தில் மரணமான உப பொலிஸ் கான்ஸ்டபிளின் உடல் சம்மாந்துறை வைத்தியசாலையில் நெஞ்சில் காலை 7.50 மணியளவில் 3 சூட்டுக் காயங்களுடன் மரணமடைந்த நிலையிலேயே அனுமதிக்கப்பட்டார் என மாவட்ட வைத்திய அதிகாரி எம்.ஐ.நசீரா அன்ஸார் தெரிவித்தார்.

மதியம் 12.15 மணியளவில் கல்முனை மாவட்ட நீதவான் திரு அன்ரன் பாலசிங்கம், பிரேதத்தினை பரிசோதித்து சுடுபட்டு மரணமானார் எனத் தீர்ப்பளித்தார்.

சம்மாந்துறை நகர் பதட்டமடைந்து, கடைகள், பாடசாலைகள் யாவும் காலை 10 மணியுடன் பூட்டப்பட்டன.

### வடகிழககில...............

வேலை நிறுத்தத்தினால் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலைகள், திருகோணமலை, பருத்தித்துறை, வவுனியா, அம்பாறை, மன்னார் ஆதாரவைத்தியசாலைகள் என்பன முற்றாக செயலிழக்கும் அபாயம் தோன்றியுள்ளது. அவசரசிகிச்சை தவிர்ந்த வெளிநோயாளர் பிரிவு, விசேட சிகிச்சைப்பிரிவுகள், ஆகியன இயங்கமாட்டாது என வைத்தியர் சங்கம் அறிவித்துள்ளது. வேலைநிறுத்த காலத்தில் அரசாங்க வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் வைத்தியசேவைகளை வழங்க மாட்டார்கள் என்றும் டாக்டர் கருணாகரன் தெரிவித்தார். வடக்கு கிழக்கில் தென்னிலங்கையை பிறப்பிடமாக கொண்ட வைத்தியர்களுக்கு அடிப்படை சம்பளத்திற்கு சமனான தொகை விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்படுகிறது. 2000 ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் வரைக்குமான கொடுப்பனவை அவர்கள் பெற்றுவிட்டார்கள், மிகுதி கொடுப்பனவையும் கொழும்பில் உள்ள அமைச்சில் வைத்து வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முதல் தென்னிலங்கை வைத்தியர்கள் இங்கு வேலைசெய்ய முடியாது என கொழும்பிற்கு சென்று அமைச்சில் கையொப்பம் இட்டுக் கொண்டிருந்தார்கள், அக்காலத்தை அவர்களுக்கு விசேட விடுமுறையாக கணித்து சம்பளத்தையும், விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவையும் தென்னிலங்கை வைத்தியர்களுக்கு வழங்கினார்கள். போர்ச் சூழலில் பெரும் சிரமங்களின் மத்தியில் கடமையாற்றும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த வைத்தியர்களுக்கு இந்த அனைத்து உரிமைகளும் மறுக்கப் பட்டிருக்கிறது என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் இளம் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார் உண்மையாக மக்களின் தேவைகள். கஸ்டங்களை உணர்ந்து வேலை செய்யும் வடகிழக்கை சேர்ந்த வைத்தியர்களுக்கு [illegible] மறுக்கப்படுகிறது. வடக்கு கிழக்கில் போர் சூழலில் சிக்கி [illegible] தமிழ் வைத்தியர்களின் [illegible] எந்த நிவாரணங்களும் வழங்கப்படாத நிலையில தென்னிலங்கை வைத்தியர்களுக்கு அரசாங்கமும், சுகாதார அமைச்சும் பல சலுகைகளையும், விசேட கொடுப்பனவுகளையும் வழங்கி வருவது வடக்கு கிழக்கு பிரதேசத்தை திட்டமிட்டு புறக்கணிக்கும் செயலாகும் என வேலைநிறுத்த போராட்டத்தை முன்னின்று நடத்தும் நடவடிக்கைச் குழுவைச்சேர்ந்த வைத்தியர் ஒருவர் தெரிவித்தார். அரசாங்கம் பிரதேச வேறுபாட்டையும், இனவேறுபாட்டையும் காட்டி வருகிறது இதை அனுமதிக்கமுடியாது.

அரசாங்கத்தின் இந்த பாகுபாட்டை நாம் அனுமதித்தால் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மக்களையும் அது பாதிக்கும். எனவே வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மக்களும் இந்த போராட்டத்தின் நியாயத்தன்மையை உணர்ந்து தமக்கு ஒத்துழைப்பு நல்கி தமது போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அரசாங்க வைத்தியர் சங்க மட்டக்களப்பு கிளை கேட்டுள்ளது. வெறும் கொடுப்பனவுக்காக இந்த போராட்டத்தை நடத்தவில்லை. இனரீதியான பாகுபாட்டை கண்டித்தே இந்த போராட்டத்தை தாம் நடத்துவதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த செய்தியாளர் மாநாட்டில் அரசாங்க வைத்தியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் டாக்டர் பிலிப் இராசநாதன் உட்பட வைத்தியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


## நன்றி நவில்கிறோம்



கடந்த 08-05-2001 செவ்வாய்க் கிழமையன்று இறைவனடியெய்திய எமது தாயார் திருமதி பூமணி கணபதிப்பிள்ளை அவர்களின் மரணச் சடகில் கலந்து.கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செய்தவர்களுக்கும் வேறு சகல வழிகளிலும் உதவி செய்தவர் களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

17, எதிர்மன்னசிங்கம் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

இப்படிக்கு
அன்னாரின்
குடும்பத்தினர்

ADVT

## விண்ணக வாழ்வில் ஒரு வருடம்



**08.06.2000 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த வணக்கத்திற்குரிய போதகர் டீ.ஜீ.சோமசுந்தரம் அவர்களின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும்**

**ஆராதனையும் அன்னார் எழுதிய தேவ மகிமை நூல் வெளியீடும் 48/1, பெயிலி 1ம் குறுக்கு வீதியில் 08-06-2001 மு.ப.10 மணிக்கு நடைபெறும்.**

தகவல்:-
மனைவி மங்களநாயகம் சோமசுந்தரமும் குடும்பத்தினரும்

ADVT


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.